10.02.2026
O.S.No. 303/2021

PW1– ஷயின்ஜா விஜயராணி – க/பெ. செல்வபண்ணையார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 10.02.2026

குறுக்கு விசாரணை : ( 4,5 பிரதிவாதிகள் தரப்பில்)

1. 1ம் தபசில் 1வது இனச்சொத்து புஞ்சைநிலம், அதற்கான பாசனக்கிணறு 2வது இனச்சொத்து என்றால் சரிதான். பிராது தபசில் சொத்து வா.சா.ஆ.1 மூலம் செந்தூர்பாண்டியனுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். செந்தூர்பாண்டியன் அவரது வகையறாக்கள் சேர்ந்து வா.சா.ஆ.2 மூலம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

2. சொத்துக்கு கிழக்கே வைத்திலிங்கம் சாமான் புஞ்சை இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. பிராதுதபசில் சொத்து கிரைய ஆவணத்தின் அசல் என் கைவசம் இல்லை என்றால் சரிதான், அதை சிதம்பரம் என்பவர் வாங்கிவிட்டார்.

3. எனது பிராதில் யாருக்கு அதிகாரம் கொடுத்துள்ளேன் என்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான். பொதுஅதிகார ஆவணத்தில் கண்ட விவரங்கள் எனக்கு தெரியும். நான் பத்திர பதிவு அலுவலகத்திற்கு செல்லவில்லை, வெளியில் வைத்து கையொப்பம் மட்டும்தான் செய்தேன்.

4,5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி